உ
ஸ்ரீ ராம ஜயம்

புருஷார்த்தங்கள்

புருஷார்த்தங்கள் நான்கு. அவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பவை. புருஷர்களால், ஜீவர்களால் விரும்பப்படுவது புருஷார்த்தம். ஸகல பிராணிகளாலும் முக்யமாக விரும்பப்படுவது ஸுகமும் துக்க நிவிருத்தியும் தான். ஸுகம் விஷய ஸுகம், மோக்ஷ ஸுகம் என இருவகை. விஷய ஸுகம் இவ்வுலகிலும் மறு உலகிலும் ஸ்திரீ, புஷ்பம், சந்தனம் முதலான ஸுக ஸாதன ங்களை இந்த்ரியங்களால் நுகர்ந்து அநுபவிப்பது. இந்த ஸுக ஸாதனங்களே அர்த்த ங்கள் என்றும் அவைகளின் ஸம்பந்தத்தால் உண்டாகும் ஸுகம் காமம் என்றும் அறியவும். இஷ்டமான விஷயங்களின் பிரிவினால் ஏற்படுவது துக்கம். இவ்வித ஸுக துக்கங்கள் புண்யத்தினாலும், பாபத்தினாலும் உண்டாவது. புண்ய பாபங்கள் பல வகையானதால் அவைகளாலுண்டாகும் ஸுகங்களும், துக்கங்களும், துக்க நிவிருத்தியும் பல வகைகள். வேத சாஸ்திரங்கள், பெரியோர்களின் ஆசாரம் இவைகளால் செய்யத் தகுந்தது என்று அறிந்து செய்வது புண்யம் தர்மம்! முற் கூறிய பிரமாணங்களால் செய்யத் தகாது என்று அறிந்து விலக்க வேண்டியது பாபம் - அதர்மம்! இவ்வித அறிவு மனுஷ்யர்களுக்கு மட்டும்தான் ஏற்படக் கூடியது. ஆகையால் மனுஷ்ய ஜன்மாவில் புண்யத்தைச் செய்தால் மேலும் நல்ல பிறப்பை அடைந்து தேவர்களாகப் பிறந்தும் ஸுகங்களை அனுபவிக்கலாம். மனுஷ்ய ஜன்மாவில் பாபங்களை செய்தால் இந்த ஜன்மாவில் ரோகாதி துக்கங்களும் மறு பிறவியில் பசு, பக்ஷி, புழு, மரம், செடி, கொடிகளாகவும் பிறந்து துக்கங்களை அனுபவிக்க நேரிடும்.

தர்மா, தர்ம விவேகமுள்ள மனுஷனை உத்தேசித்துத் தான் சாஸ்திரங்கள் முக்யமாக ஏற்பட்டிருக்கின்றன. முக்யமாக மனுஷ்யனுக்குத்தான் புண்ய, பாபங்கள் உண்டு. மனிதன் கூடிய வரையில் பாபங்களைச் செய்யாமல் ஈச்வரார்பணமாக புண்யங்களை (பலனை விரும்பாமல்) செய்து கொண்டு வந்தால் நாளடைவில் சித்தம் சுத்தமாகி விடும். ஞானத்தை யடைய யோக்யதை ஏற்பட்டுக் ஞானத்திற்கு வேண்டிய ஸந்யாஸம் முதலான முக்கிய ஸாதனங்களை அடைந்து ஞானத்தால் அகண்ட ஸச்சிதானந்த பிரும்ம ரூபமடைந்து நித்ய ஸுகத்தை அநுபவிக்கலாம். மறுபிறவி ஏற்படாது.

இவ்விதம் அநித்யமான விஷய ஸுகம் காமம் என்றும் நித்யமான அழிவில்லாத ஸுகம் மோக்ஷமென்றும் இந்த இருவித ஸுகங்களும் பல ரூபமானது, தர்மம், அர்த்தம் என்ற இரு புருஷார்தங்களும் ஸாதனங்கள், முக்யமில்லை என்றும் அறியவும்.

இவ்விதம் தர்மத்தைச் செய்து கொண்டே வந்தால் அதனால் பழக்கம் ஏற்பட்டு தர்மத்தைச் செய்யக் கூடும். தர்மத்தினால் தான் விஷய ஸுக ஸாதனமான அர்த்தங்களை அடையலாம். தர்மத்தினாலேயே விஷய ஸுகமான

காமத்தை யடைய முடியும். அவ்விதமே தர்மத்தை பலனைக் கருதாமல் ஈச்வரார் பணமாகச் செய்தால் சித்த சுத்தி முதலானவை ஏற்பட்டு மோக்ஷத்தை யடையலாம். ஆகையால் தர்மமே பிரதானம். இதைக் கருதித்தான் மனு "தர்மோ ரக்ஷதிர்ஷித:" என்று தர்மத்தை நாம் கைவிடாமல் அனுஷ்டித்து வந்தால் அது நம்மை மோக்ஷம் வரையில் காப்பாற்றும்" என்று கூறினார். ஆகையால் முதலாவது தரமத்தைப் பற்றிக் கூறுவோம்.

தர்மத்தின் பலம் இஷ்டவஸ்து பிராப்தி, அநிஷ்ட நிவிருத்தியும். அதர்மத்தின் பலன் அநிஷ்ட பிராப்தி, இஷ்ட நிவிருத்தியும் என்பது.

ஸகல வைதிக கர்மாக்களையும் செய்ய முறையான சௌசம், ஸ்நானம், ஆகார நியமம், மடி முதலான ஆசாரம் என்று தர்மங்கள் தேவை.

தர்மாதர்மங்கள் தேவர்களுக்கும் கூட பிரத்யக்ஷமில்லை. ஆகையால் அவைகளுக்கு அதிருஷ்டம் எனப் பெயர். வேத சாஸ்திரங்களும், பெரியோர்களு டைய அனுஷ்டானமும், அவர்களால் புகழப்பட்டதும் தர்மம், வேத சாஸ்திரங்களால் செய்யக் கூடாது என்று கூறப்பட்டதும், பெரியோர்களால் இகழப் பட்டதும் அதர்மம்.

தர்மங்கள் பல வகை. நித்யம், நைமித்திகம், காம்யம், வர்ண தர்மம், ஜாதி தர்மம், குலதர்மம், ஸ்திரீ தர்மம், புருஷ தர்மம், ஸாமாந்ய தர்மம், விசேஷ தர்மம், ஆபத் தர்மம், என்பவை. அவரவர்களுக்குரிய தர்மங்களை சிரத்தையுடன் அனுஷ்டி த்தால் இவ்வுலகில் இவ் வுலக ஸுகம், ஸ்வர்க ஸுகம் இவைகளை அனுபவித்து மறு ஜன்மாக்களிலும் ஸகல இஷ்டங்களையும் அடையலாம்.

முக்யமான தர்மத்தை அனுஷ்டிக்க ஸ்நானம், சுத்தம், ஆஹார நியமம், முதலான தர்மங்களுக்கு ஆசாரம் எனப் பெயர்,

ஸ்வதர்மங்களை விட்டவனுடைய தேவதா பக்தியோ தீர்த்தாரனமோ பலன ளிக்காது. முடிந்தால் புண்ய நதீ தீரங்களில் வஸிப்பது நலம். கெட்டவர்களுடன் நெருங்காமலிருப்பது நலம்.

கலியுகத்தில் வானப்ரஸ்தாச்ரமம், பெண்ணுக்கு மறுமணம், நைஷ்டிக பிரம்ம சர்யம். இன்னும் சில கூடாது. சரீரம், இந்திரியங்கள், மனம் இவைகளால் செய்யப் படும் நற் காரியங்கள் தர்மம் இவைகளால் செய்யப்படும் கெட்ட காரியங்கள் அதர்மம். இவைகளால் மனதில் ஏற்படும் பதிவு என்பதும் (சம்ஸ்காரம்) தர்மம், எனப்படும். இந்த ஸுக்ஷ்மமான சமஸ்காரமே பிற்காலத்தில் பலனைக் கொடுக்கக் காரணமாகிறஹு. ஈச்வரனும் ஸாக்ஷியாக இருந்து பலனைக் கொடுக்கின்றார். பூமியில் விதைத்த விதை பிற்காலத்தில் பலனளிப்பது போல் என்று அறியவும்.

புண்ய, பாப, கர்மாக்கள் அதன் சக்தியை அனுஸரித்து சீக்கிரத்திலேயோ, வெகுகாலம் சென்றோ அவசியம் பலனைக் கொடுக்கும். பிரும்ம ஞானம் ஏற்பட்

டால் அவைகள் பலனளிக்காமல் போகும். பாபங்கள் பிராயச்சித்தம் செய்தால் நிவிருத்தியாகும். ஸ்தூல சரீரத்தைத் தவிர ஸுக்ஷ்ம சரீரம் ஒன்று உண்டு. அதில் மனது பிரதானம். அதிலேயே கர்ம வாஸனைகள் பதிவாகி ஸ்வர்கம், நரகம், பூலோகம் இவைகளுக்கு சென்று மனதோடு கூடிய ஆத்மா ஸுக, துக்கங்களை அனுபவிப்பது என்று ஸ்தூல சரீரத்தைத் தவிர ஆத்மா நித்யமாக உள்ளது என்ற நிச்சய புத்தியுள்ளவனே வைதிக கர்மாக்களைச் செய்ய அதிகாரியாவான். வேத ஸாஸ்திரங்கள் பிரமாணங்கள் அதன்படி ஆத்மா நித்யன். புண்யம், பாபம் அதன் பலனை அனுபவிக்க ஸ்வர்க, நரகாதிகள் உண்டு. புண்ய பாபங்களுக்குப் பலனை யளிக்க ஈச்வரன் உண்டு என்ற நம்பிக்கை உள்ளவனே ஆஸ்திகள். இவைகளை நம்பாதவன் நாஸ்திகன். ஆஸ்திகனே வேத, சாஸ்திரங்களுக்கு அதிகாரியாவான்.

போஜனத்திற்குப் பிறகு ஸ்ரீ ராம் ஜய ராமா ஜய ஜய ராமா என்று 21 தடவை தினமும் ஜபம் செய்தால் புண்யம்.

பிராமணன் வேதங்களைப் படிப்பது பிறருக்கு (யோக்யதை உள்ளவர்களுக்குச்) சொல்லிக் கொடுப்பது, யாகாதிகளைச் செய்வது, செய்விப்பது, தானம் கொடுப்பது, தானம் வாங்குவது இந்த ஆறுக்கும் தகுதி உள்ளவன். வேதம் படிப்பது, யாகாதிகள் செய்வது, தானம் கொடுப்பது இவைகள் அவசியம். மற்ற மூன்றும் ஜீவனார்தம் செய்யலாம். செய்யாவிட்டால் பாபமில்லை. முற்கூறிய மூன்று கடமைகளையும் சக்திக்கு இயன்ற அளவு செய்ய வேண்டும். ஜீவனார்த்தம் செய்யும் கர்மாக்களைச் செய்தால் பிராயச்சித்தமும் செய்ய வேண்டும். தனக்குரிய வேதத்தையே அத்யய னம் செய்து அதன்படி நடக்க வேண்டும் என்பது முக்யம். வேதத்தை குரு முகமாக வே கிரகித்து அர்த்த விசாரம் செய்து, மறக்காமலிருக்க ஆவர்த்தி செய்து நியமத்துடன் பாராயணம் செய்து சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அக்நிஹோத்ரம், யாகம் முதலான ஸெளர்த கர்மாக்களைச் செய்யாவிட்டாலும், ஸந்தியா வந்தன்ம், ஔபாஸநம், வைச்வதேவம் முதலான ஸ்மார்த்த கர்மாக்களை யாவது முடிந்தவரை அவசியம் செய்ய வேண்டும்.

அஸூயை: - கல்வி, பணம், குணம் இவைகளால் தன்னைக் காட்டிலும் மேலானவனைப் பார்த்து தன்னால் அவனைப் போல் ஆக முடியாது என அறிந்து அவனிடம் குற்றம் கல்பிப்பது.

கலியுகத்தில், தானமும் பகவந்நாம சங்கீர்த்தனமும் விசேஷம். ஆகையால் ஸத்பாத்திரமான நல்ல ஸாதுக்களுக்கு தன் சக்திக்கு இயன்ற அளவும் தானம் செய்ய வேண்டும். பசித்தவர்களுக்கு அன்னதானம் செய்வது விசேஷம். அந்நம், வித்யை, கந்நிகை இவைகளை அபேக்ஷை உள்ளவர்களுக்கே செய்ய வேண்டும்.

அவசியமில்லாமல் தானம் செய்த புண்யங்களைப் பிறரிடம் கூறினால் பலனில்லாமல் போய் விடும். வேதம் படித்து ஸதாசாரத்துடனிருப்பவர்களுக்கு தானம் செய்தால் அதிக பலன்.

ஸ்வதர்மத்தை விட்டவனுக்கும், கடவுள் பக்தி இல்லாதவனுக்கும் தானம் கொடுக்கக் கூடாது. தன் குடும்ப நிலையைக் கருதி நல்ல சுரோத்ரியனிடம் (வைதிகன்) இருந்தும் ஸாதாரண தார்மிகனிடமிருந்தும் தானம் வாங்கலாம். சிரம தசையில் ஜீவனத்திற்கும் கஷ்டப்படும் பிராமணன் தன் நித்ய கர்மாக்களை அனுஷ்டித்துக் கொண்டு ஆபத் கால தர்மமாக வியவஸாயம், உசிதமான பொருள் களை வியாபாரம் செய்தல் இவைகளைச் செய்தும் ஜீவிக்கலாம்.

(ஈர்ஷை) பொறாமை - கல்வி, பணம், குணம் இவைகளால் தன்னைக் காட்டிலும் மேலானவனைப் பார்த்து தானும் அவனைப் போலவோ, அவனைக் காட்டிலும் மேலாகவோ ஆக வேணும் என்ற போட்டி குணம்.

க்ஷத்ரியன் தேசத்தில் துஷ்ட நிக்ரஹம் (அடக்குதல்) ஸாதுக்களை பரிபாலனம் செய்வது (இவ் வகையில் அந்நிய ராஜாக்களுக்கும் உதவி செய்வது, நீதி தவறாமல் அரசாட்சி செய்வது இவைகளைச் செய்ய வேண்டும். முக்ய தர்மங்கள் பசுக்களைக் காப்பாற்றுதல், தானம் செய்தல், வேதம் படித்தல், யாகம் செய்தல், வட்டி வாங்குதல், வியவஸாயம் செய்தல் இவைகள் வைச்யர்களுக்கு முக்ய தர்மங்கள்.

முந்திய மூன்று வர்ணத்தார்களுக்கு சிரத்தையுடன் பணிவிடை செய்தல், சில்ப வேலைகள் (கைத் தொழில்) இவைகள் சூத்ர தர்மங்கள்.

பொது தர்மங்கள் எல்லா வர்ணத்தார்களுக்கும் - பொறுமை, பிரியமாகவும், நன்மை செய்பவையாகவும் உள்ள உண்மை பேசுதல், மன அடக்கம், சரீர சுத்தி, தானம் கொடுத்தல் இந்திரியங்களை அடக்குவது, அஹிம்ஸை, பெரியோர்களுக்குப் பணிவிடை செய்தல், தீர்த்த யாத்திரை, தயவு, வஞ்சமின்மை, பேராசையின்மை, அஸூயையின்மை, திருடாமை, தெய்வ பக்தி, பிராமண பக்தி இந்த தர்மங்கள் எல்லா வர்ணத்தாருக்கும், ஸகல ஜாதிகளுக்கும் பொதுவானவை.

காலையிலும், மாலையிலும் ஸந்தியா காலங்களில் தூக்கம், ஆஹாரங்கள் கூடாது.

அவசியம் செய்ய வேண்டிய வைதிக கர்மாக்களை குறிப்பிட்ட காலத்தில் செய்ய முடியாவிட்டால் அந்தக் காலத்தின் முன் காலங்களில் செய்யலாம். யக்ஞோபவீதம் இல்லாமல் கர்மாக்களைச் செய்யக் கூடாது. பொதுவாக கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆசமனம், ஸங்கல்பம் செய்ய வேண்டும். கழுத்தில் வஸ்திரத்தைச் சுற்றிக் கொண்டு செய்யக் கூடாது. கடைசியில் பிராயச்சித்தமாக கிருஷ்ணஸ்மரணம் செய்ய வேண்டும்.

கர்பா தானம் முதற் கொண்டு 40 ஸம்ஸ்காரங்கள் (சுத்திக்காக ஏற்பட்ட கர்மாக்கள்) தயை, பொறுமை, அஸூயை இன்மை, சௌசம், (சுத்தி) தன்னையும், பிறரையும் சிரமப்படுத்தாமல் கார்யம் செய்வது, மங்கள காரியம், நற் காரியங்கள்,

கஞ்சத்தனமின்மை, நல்ல மனதுடன் பிறருக்கு உபகாரம் செய்தல், பிறர் பொருளை விரும்பாமை என்ற இந்த எட்டு நற்குணங்களும் வேண்டும். ஆத்ம குணங்கள் என்ற நற்குணங்கள் முக்யமானவைகள்.

உபநயனம் எட்டாவது வயதில் செய்ய வேண்டும். பதினாறு வயதிர்க்கு மேல் போகக் கூடாது. பிரும்மசாரிக்கு ஒரு உபவீதம், கிருஹஸ்தனுக்கு இரண்டு உத்தரீய ஸ்தானத்தில் ஒன்று சேர்த்து மூன்று. உபவீதத்துடன் சிகையை முடித்தும் செய்யப் பட்ட கர்மாவே பலன் தரும். செருப்பு, வஸ்திரம், உபவீதம், ஆபரணம், பூ மாலை, ஜல பாத்திரம் இவைகள் பிறருடையவைகளை உபயோகிக்கக் கூடாது.

மாத்ரு பக்தியால் இவ்வுலகிலும், பித்ரு பக்தியால் மேல் உலகிலும், ஆசாரிய பக்தியால் பிரும்ம லோகத்திலும் ஸுகத்தை அனுபவிப்பான்.

பெரியோர்களை நமஸ்காரம் செய்து ஸேவிப்பவர்களுக்கு ஆயுஸ், புத்தி, புகழ், பலம் இவைகள் விருத்தியடையும்.

பிரதி வருஷமும் பிராமணர்களால் செய்யப்படும் உபாகர்மா, உத்ஸர்ஜன கர்மாக்களால் அத்யயனம் செய்த வேத பாகங்களுக்கு மறுபடியும் உயர்ந்த வீரியம் ஏற்படுகிறது.

கந்யா வரனுக்கும், சிரார்த போக்தாவுக்கும் குலம், குணம் இரண்டும் அவசியம்.

ருதுமதீவிவாளை பிராயச்சிதம் - முன் ருது காலத்தை எண்ணி அத்தனை கோ தானம் அல்லது ஒரு கோ தானம் அல்லது தகுந்த தெக்ஷிணை கொடுத்து பிராமண போஜனம் இவைகளை கன்னியின் பிதா செய்ய வேண்டும். கன்னிகை மூன்று நாள் உபவாஸம் இருந்து சிகப்பு ரத்னத்தை ஐந்து வயதுக்குட்பட்ட கன்னி கைக்கு தானம் செய்ய வேண்டும். இவ்விதம் கன்னிகையின் பிதா, வரன், கன்னிகை மூவரும் விவாஹத்திற்கு முன் கூறிய பிராயசித்தம் செய்ய வேண்டும்.

ஸ்திரீகள் மது அருந்துவது, கெட்டவர்களுடன் ஸ்நேகம், பர்தாவை விட்டு பிரிந்திருப்பது, காரணமில்லாமல் ஊர் சுற்றுவது, அகாலத்தில் தூங்குவது, பிறர் கிருகத்திற்குப் போய் வஸிப்பது, இவைகளைச் செய்யக் கூடாது. ஸ்திரீகளுக்கு தனியாக தர்மானுஷ்டானங்கள் தேவையில்லை. நல்ல மனதுடன் பர்தாவிற்கு பணிவிடை செய்தாலேயே ஸ்வர்கத்தை அடைவாள். ஜபம், தபம், தீர்த்தாடனம், ஸந்யாஸியாக - ஸந்யாஸி மாதிரியாக இருப்பது, மந்திரங்களை அதிக ஆவர்த்தி செய்வது, தேவதைகளை உபாஸிப்பது இவைகளில் அதிகம் ஈடுபட்டால் பாதிவ்ரத்ய த்தைக் கெடுக்கும். ஆனால் காலையில் ஸ்நானம் செய்து சூரியனைக் குறித்து ஜலத்தினால் அர்க்யம் கொடுத்தால் ஏழு ஜன்மாக்களில் வைதவ்யம் ஏற்படாது. பதிவ்ரதா ஸ்திரீகள் பார்வதிக்கு ஸமானம். அவர்களுக்கு ஒரு கேடும் நேரிடாது. கர்ப்பிணீ ஸ்திரீகள் ஸந்தியா காலத்தில் ஆகாரம், தூக்கம், ஸ்னானம் இவைகளைச்

செய்யக் கூடாது. மரத்தடியில் போகக் கூடாது. அமங்களமான வார்த்தை பேசுதல், அவசியமில்லாமல் சிரித்தல் கூடாது. அவர்களின் மசக்கை ஸமயம் நியாயமாகக் கேட்டதைக் கொடுத்து திருப்தி செய்ய வேண்டும்.

கலியுகத்தில் நைஷ்டிக பிரும்மசர்யமும், வானப்ரஸ்தாச்ரமும் கூடாது.

கிருஹஸ்தன் - சிராத்தம், யஞ்ஞம், பிராமண போஜனம், அதிதி பூஜை, வேத பாராயணம், கருணை, வைச்வதேவம், புத்ர பிராப்தி, யதி பிக்ஷை, பிரும்மசாரி பிக்ஷை, ஸத்யம், கோபமின்மை, ஸந்தியாவந்தனம், தானம், ஸ்நானம், காயத்ரீ ஜபம், மாதா, பிதாக்களை ரக்ஷிப்பது இவைகளையும் மற்றும் சாஸ்திரங்களில் தனக்குக் கூறப்பட்ட தர்மங்களையும் செய்து கொண்டு தகுதியான விருத்தியால் ஜீவனம் செய்து கொண்டும் இருப்பவன் பிரும்ம லோகத்தை யடைவான்.

பூர்ணமான வைராக்யமிருந்தால் பரமஹம்ஸ ஆச்ரத்தையடைந்து, ஸ்நான, சௌசங்களைச் செய்து ஏகாந்தமாக இருந்து பிக்ஷை எடுத்துக் கொண்டு ஸதா சிரவண, மனந நிதித்யாஸனம் (தியானம்) செய்து கொண்டு கிராமத்தில் ஒரு நாள் என்றோ, முடியாவிட்டால் நகரத்திலோ, ஒரே இடத்திலோ இருந்து கொண்டுமிருக் கலாம். அவர்களை கிருஹஸ்தர்கள் ஆராதிக்க வேண்டும்.

தினக்கடன்

அதிகாலை பிரம்ம முகூர்த்தம் என்ற நாலரை மணிக்கு கால், கை சுத்தம் செய்து கொண்டு வாய் கொப்பளித்து விட்டு ஆசமனம் செய்து விட்டு குரு த்யானம் செய்து பகவானுடைய நாமாக்களைக் கூறி ஸாதுக்கள், புண்ய நதிகள் முதலானவ ற்றை நினைக்க வேண்டும். பிறகு நேற்று தர்ம காரியங்கள், அதர்ம காரியங்கள் என்ன செய்தோம், குடும்ப காரிய சிரமங்கள் என்ன ஏற்பட்டது என்று யோசித்து இன்று செய்ய வேண்டியதையும் சிந்திக்க வேண்டும். இதனால் நற்காரியங்களில் பிரவிருத்தியும், பாபங்களிலிருந்து நிவிருத்தியும் ஏற்படும். பிறகு தேச, காலங்களை அனுசரித்து சௌசம், பல் துலக்கல், ஸ்நானம், வஸ்த்ர புண்டர தாரணங்கள் செய்து கொண்டு ஸந்தியா வந்தனம் செய்ய வேண்டும். மல, மூத்ர விஸர்ஜனம் செய்யும் பொழுது வலது காதில் பூணூலை சுற்றிக் கொள்ள வேண்டும்.

சௌசம் என்பது உபநயனமாகாத பையங்களுக்கும் ஸ்த்ரீ, சூத்ரர்களுக்கும் உண்டு. (கை, கால் கழுவி, வாய் கொப்பளித்து ஆசமநம் செய்வது). வைதிக தர்மங் களை நம்பிக்கையுடன் செய்ய வேண்டும். நம்பிக்கையில்லையேல் செய்து பலனி ல்லை. ஆசமனம், வடக்கு அல்லது கிழக்கு முகமாக இருந்து செய்ய வேண்டும். சுத்யர்த்தம் இரண்டு தடவை ஸ்நானம் செய்த பிறகே ஸந்தியா முதலான வைதிக கர்மாக்களையோ, போஜனமோ செய்ய வேண்டும்.

ஸ்நானம் ஸகல ஜாதிகளுக்கும் உண்டு. பிராமணன் ஸ்நான காலத்தில் அஹமர்ஷண முதலான வேத மந்திரங்களைச் சொல்ல வேண்டியது. அவசியம்

பகவந் நாமஸ்மரணம், கங்கை புண்ய நதீ ஸ்மரணம் இவைகளையாவது செய்யவும்.

நதிகளில் எதிர் முகமாகவும், குளங்களில் சூர்யனைப் பார்த்தும் செய்யவும். தேவதா ஸந்நிதியானால் தேவதையைப் பார்த்துக் கொண்டு ஸ்நானம். முடிந்தால் ஸங்கல்பம், மந்திர வருணபடனம், புரோக்ஷணம், அகமர்ஷண ஸூக்த ஜபம், தேவாதி தர்பணம் என்று ஐந்து அங்கங்களுடன் சரீர ஸ்திதியைக் கருதி வெந்நீரிலும் ஸ்நானம் செய்யலாம். விஷ்ணு த்யானம், மாநஸ ஸ்நானம், ஸேது வைத்தவிர மற்ற இடங்களில் அமாவாஸ்யை முதலான பர்வ காலங்களைத் தவிர மற்ற நாள் ஸ்நாநம் செய்யக் கூடாது.

நாய் முதலானவைகளைத் தொட்டால் ஸ்நாநம், தேவதைகளில் உத்ஸவ தெரிசனம், மங்கள காரியம், பந்துக்களை வழியனுப்புதல், போஜனம் இவைகளைச் செய்து விட்டும், கிரஹணம் முதலான காரணமில்லாமல் இரவு (அர்த்த ராத்ரியிலும்) ஸ்நாநம் செய்யக் கூடாது.

கிரஹண காலத்தில் கங்கா ஸ்நானம் மிகவும் விசேஷம். கிரஹண ஸ்பர்சமான வுடன் ஸ்நாநம், மத்ய காலத்தில் ஜபதர்பணங்கள் விட ஆரம்பிக்கும் பொழுது தானம், விட்ட பிறகு ஸ்நானம் என்று அறியவும்.

தேவதா தரிசனம், விவாஹம், யாகம், உத்ஸவம் இவைகளில் ஸ்பர்ச தோஷம் கிடையாது. கிருஹஸ்தன் கச்சம் (தார்) கட்டிக் கொண்டு மேல் உத்தரீயத் துடன் வைதிக கர்மாக்களைச் செய்ய வேண்டும். விபூதியோ, கோபி சந்தனமோ குல சாரம்படி நெற்றியில் தரித்துக் கொண்டு ஸந்தியா வந்தனம் செய்ய வேண்டும்.

காலையில் சூர்யோதயத்திற்கு முன்பும், மத்யானம் நடுப் பகலிலும், ஸாயங் காலம் சூர்ய அஸ்தமன காலத்திலும் ஸந்தியா வந்தனம் செய்ய வேண்டும். முடியாவிட்டால் இரண்டு அல்லது மூன்று நாழிகைக்கு மேல் படாமல் அதற்குள்ளாகவாவது செய்ய வேண்டும். எப்படியும் செய்யாமல் விடக்கூடாது. ஸந்தியா வந்தனம் செய்யாமல் வேறு வைதிக காரியங்கள் செய்தால் பலன் கிடையாது. ஸந்தியில் அர்க்ய பிரதானம் “அஸாவாதித்யோபிரும்ம” என்ற தியானம் காயத்ரீ ஜபம் உபஸ்தானம் இவைகள் முக்யமானவை. காயத்ரீ ஜபம் 108 அல்லது 54 என்றாவது செய்ய வேண்டும். ஆசௌச காலத்தில் 10 செய்தால் போதும். பிறகு ஸமயம் இருந்தால் புருஷ ஸூக்தம் முதலானவை ஜபிக்கலாம். சிவ, விஷ்ணு நாமாக்களை பக்தியும் எப்போதும் ஜபித்து வந்தால் ஸகல பாபங்களும் நீங்கும். வைதிக கர்மாக்கள் தர்ப, பவித்ரம் தரித்துச் செய்ய வேண்டும். அல்லது கையில் தங்க மோதிரம் இருந்தாலும் விசேஷம். ஸந்தியா வந்தனம் ஸூர்ய நமஸ்காரம் செய்து விட்டு பிரம்ம சாரியும், கிருஹஸ்தனும் ஸமிதாதானம், ஔபாசன ஹோமங்களைச் செய்ய வேண்டும். காலையிலும், மாலையிலும் முடியாவிட்டால் அதற்குரிய மந்திரங்களையாவது ஜபம் செய்யலாம். அக்னி ஹோத்ரம் ஔபாஸனம்

செய்ய முடியாதவர்கள் ஸ்நானம், ஸந்தி, தேவ பூஜை, பஞ்சாக்ஷராதி ஜபம், பகவத் நாம ஜபம் இவைகளையாவது செய்ய வேண்டும்.

அக்னியில் ஹோமம் செய்யும் திரவியங்களை ஜலத்தால் புரோக்ஷணம் செய்ய வேண்டும். அக்னியில் அக்னி ஹோத்ர ஔபாஸனங்கள் செய்வதால் மழை பெய்து லோக க்ஷேமங்கள் ஏற்படும். மார்த்யான்னிலம் செய்து பிரும்ம எக்ஞும் செய்ய வேண்டும். இதில் தான் படித்த வேதத்தைச் சொல்ல வேண்டும். செவ்வாய், வெள்ளி பிற்பகல் அமாவாஸ்யை பூர்ணிமை த்வாதசீ இரவு ஸந்தியா காலம் இவைகள் துளஸியை பரிக்கக்கூடாது.

ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, கணேசர், மஹேஸ்வரன், சுப்ரமண்யர் இந்த தேவதைகளைப் பூஜித்தால் ஆரோக்யம், தனம் முதலான இஷ்டங்கள் ஸித்திக்கும். பஞ்சாக்ஷர, அஷ்டாக்ஷர மந்திரங்களாலும் பூஜை செய்யலாம். பகல், இரவு இரு வேளை வைச்வ தேவம் செய்ய வேண்டும். இக்காலத்தில் முடியாவிட்டால் பகவானுக்கு நிவேதனம் செய்து பிறகு போஜனம் செய்ய் வேண்டும். வந்த அதிதிக் கும் போஜனம் அளிக்க வேண்டும். ஸந்யாஸிகள், பிரும்மசாரிகள் இவர்களுக்கு பிக்ஷை போட வேண்டும். ஸந்யாஸிக்குத் தங்கத்தையும், பிரும்மசாரிக்கு அரிசியை யும், க்ருஹஸ்தனுக்கு அன்னத்தையும் பிக்ஷையாக கொடுக்கக்கூடாது.

கை கால் வாய் அலம்பி சூசமனம் செய்து சூஸனத்தில் கிழக்குமுகமாக இருந்து போஜனம் செய்ய வேண்டும். மேற்குதிக்கையும் நோக்கி சாப்பிடலாம். காலில் செருப்பு தலைபாகையுடனும் கூடாது. (போஜனம்) பரிஷேசனம் பிராணாஹுபதி செய்து சாப்பிடவும். சாப்பிடும் பொழுது ஊர்வம்பு பேசக்கூடாது. பகல் 1½ மணி முதல் 4½ மணி வரை சாஸ்திரம் இதிஹாஸ புராணங்களை அப்யாஸம் செய்யவும். பிறகு குடும்ப காரியங்களை கெவனிக்கவும். பகலில் தூங் கக் கூடாது. ஸ்த்ரீ ஸங்கமமும் கூடாது. போஜனம் செய்த பிறகு தாம்பூலம் உபயோகிக்கலாம். அதிகமாக பல தடவை தாம்பூலம் தரித்தால் புத்தி முதலானவை கெடும். இரவில் வடக்கில் தலை வைத்துப் படுக்கக்கூடாது. பகவானை ஸ்மரித்துக் கொண்டு தூங்க வேண்டும். படுக்கும் முன் கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு உலர்ந்தபின் படுக்க வேண்டும். இங்கு கூறிய தர்மங்களில் முடிந்தவரை அனுஷ்டித்தால் க்ஷேமத்தை அடையலாம்.

தாயாதிகள், பந்துக்கள் இவர்களுக்குள் குழந்தை பிறந்தாலும், ஒருவர் மரணமடைந்தாலும் தீட்டு 10, 3, 1½, 1 நாள்கள் என்ற ஸாஸ்திர முறைப்படி உண்டு. தீட்டு என்பது சாஸ்திரத்தை நம்பியே அனுஷ்டிக்கப் பட வேண்டும். நேரிலோ யுக்திக்கோ புலப்படாத ஒரு ஸூக்ஷ்ம விசேஷம்.

அந்தக் காலங்களில் ஸந்தியா கர்மாவை மட்டிலும் சுருக்கமானதாலும் செய்ய வேண்டும். வேறு வைதிக கர்மாக்களைச் செய்யக் கூடாது. சில கர்மாக்கள் கிரஹண தர்ப்பண முதலியன செய்யலாம் என்று விலக்கும் உண்டு. பிரும்மசாரி க்கும், ஸந்யாஸிகளுக்கும் தீட்டு கிடையாது. சில தீட்டுகள் புருஷர்களுக்கு உண்டு.

அது மனைவிக்கும் உண்டு. சில தீட்டுகள் மனைவி மட்டுக்குமே. அது கணவர்களுக் குக் கிடையாது. கேட்டு அறிந்து கொள்ளவும். ஆசௌச காலத்தில் ஸந்தியா வந்தனம் செய்யும் பொழுது பத்து காயத்ரீ ஜபம் மனதினால் ஜபம் மனதினால் ஜபிக்கவும். ஸ்னானம் சௌசம் முதலியன உண்டு, விடக்கூடாது.

மரண காலத்தில் கங்கா ஜலம் துளியாவது துளஸியுடன் அருந்துதல், வலது காதில் துளஸியை தரிப்பது விபூதி, ருத்ராக்ஷதாரணம், சாளக்கிராம தீர்த்தம், பகவந் நாமத்தைக் கூறுதல், தானம் செய்தல் இவைகள் புண்யமாகும். சுத்தமும் அடைந்தவுடன் பூமியில் இல்லாமல், தரையில் தர்ப்பைப் புல்லை பரப்பி அதில் படுக்க வைக்க வேண்டும். புத்ரன், மாதா, பிதாக்களின் மரண காலத்தில் அவர்களுடைய வலது காதில் புண்ய மந்திரங்களையும், சிவ, விஷ்ணு ராமாதி நாமங்களைக் கூறவேண்டும். (+மரணம்)

பூமியிலிருந்து யமலோகம் வெகு தூரத்திலிருப்பதால் இறந்தவர்களுக்கு அந்த வழி செல்ல வேண்டியிருப்பதால் அவர்கள் சிரமமில்லாமல் செல்வதர்க்கு இறந்த பிதாக்களை உத்தேசித்து புத்ரன் தானங்கள் செய்ய வேண்டும்.

வெளியூர் செல்பவனுக்கு வித்யையும், வீட்டில் இருப்பவனுக்கு மனைவியும், நோயாளிகளுக்கு வைத்யனும் மரணமடைகிறவனுக்கு தானமும் நண்பர்கள். (உபகாரம் செய்பவர்கள்) பிதா, மாதா இவர்கள் உயிருடன் இருக்கும் பொழுது அவர்களை ஆதரவுடன் ரக்ஷித்து, இறந்த பின் சிரத்தையுடன் வைதீக கார்யங்களைப் புத்ரன் செய்தால் அவனுக்கு அளவில்லாத புண்யம் கிடைக்கும்.

புத்ரன் செய்யும் பிதிரு காரியங்களால் மாதா, பிதாக்கள் புண்ய லோகத்தை யடைகிறார்கள். புத்ரனுக்கும் மிகுந்த நன்மை உண்டாகும். ஆகையால் மாஸிகாதி கள் ஆப்திகம் வருஷம் தோறும் செய்ய வேண்டிய பிரத்யாப்திக சிரார்த்தம், ஸோத கும்பம் இவைகளை சிரத்தையுடன் தேச, காலங்களுக்குத் தகுந்தபடி முடிந்தவரை அவசியம் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் பாபம் ஏற்படும் என்று தர்ம ஸாஸ்திரம் கூறுகிறது.

மஹாளய பக்ஷத்தில் முடிந்த அளவு ஹிரண்ய சிரார்த்த தர்பணங்களையா வது அவசியம் செய்யவும். சிரத்தையுடன் பித்ருக்களை உத்தேஸித்து செய்யும் கர்மா சிராத்தம் எனப்படும். பித்ரு காரியங்களில் வேதம் படித்து ஸந்தி முதலான ஆசாரமில்லாதவனைக் காட்டிலும் வேதம் படியாத, காயத்ரி ஜபம், ஸந்தி ஆசாரமு ள்ள பிராமணன் மேலானவன். மாதா, பிதாக்களை உத்தேசித்து முடிந்த அளவு சிரத்தையுடன் சிராத்தம் செய்தால் பித்ருக்களுடையவும் விஷ்ணுவினுடையவும் அனுக்ரகத்தால் ஸகல க்ஷேமங்களையும் அடைவான்.

ஸூரிய அஸ்தமானத்திற்குப் பிறகு 3 முகூர்த்தம் or 6 நாழிகை பிரதோஷ காலம். 1 நாழிகை 24 நிமிஷங்கள் வைதிக கர்மாக்களைச் செய்ய சுத்தமான இடம், கர்மாக்களைச் செய்ய குறிப்பிட்ட காலங்கள், அதாவது பகல், இரவு, திதி, வாரம்

நக்ஷத்ரங்கள் அறிந்து செய்ய வேண்டும். சில தர்மங்கள் தகாத காலங்களில் செய்தால் கெடுதல் ஏற்படும். புண்ய காலங்களில் செய்தால் தர்மம் அதிக பலன்களைக் கொடுக்கும். புண்ய தேசங்களிலும் அவ்விதமே. அதே போல் பாபமும் அதிக பாபத்தைக் கொடுக்கும்.

அக்ஷய திருதியை, விநாயக சதுர்த்தி, ஸ்கந்த ஷஷ்டி, ரத ஸப்தமீ, பீஷ்மாஷ்டமி, ஸ்ரீ ராம நவமி, கிருஷ்ணஷ்டமி, கோகுலாஷ்டமீ - கிருஷ்ண ஜன்மாஷ்டமீ, ஸரஸ்வதீ பூஜை, மஹா நவமி, விஜய தசமி, சுக்ல, க்ருஷ்ண ஏகாதசிகள், அமாவாஸ்யை பூர்ணிமை இது போன்ற புண்யகாலங்களிலும், தானம், பூஜை உபவாஸம் முதலான புண்ய கார்யங்களை சக்திக்கியன்ற அளவு செய்தால் புண்யம், பகவத் ப்ரீதியில், இஷ்ட ஸித்தியும் ஏற்படும்.

ஏகாதசீ விரதம் மிகவும் சிறந்தது. வைதிக கர்மாக்கள் சிறிய அளவு செய்தாலும் பலனுண்டு. வீண் போகாது. அவசியம் செய்ய வேண்டும்.

வேத சாஸ்திரங்களில் நித்ய கர்மா, நைமித்திக கர்மா, காம்ய கர்மா, பிராயச்சித்த கர்மா நிஷித்த கர்மா. எனப் பல வகையுள்ளன. ஸந்தியா வந்தனம் முதலானது உயிருள்ளவரை செய்ய வேண்டியது. இது நித்ய கர்மா, கிருஹணம், ஜாதகர்மா முதலானது நைமித்திக கர்மா. ஏதோ ஒரு ஸமயம் அவசியம் நேர்ந்த பொழுது செய்வது. இவைகளைச் செய்யா விட்டால் பாபம் உண்டு செய்தால் பலனுண்டு. புத்ர காமேஷ்டி, ஆயுஷ் ஹோமம் முதலியன காம்ய கர்மாக்கள். இவை களைச் செய்தால் கோரிய, குறிப்பிட்ட பலன் கிடைக்கும். நிஷித்த கர்மா என்பது பாபம் செய்வது. இதனால் நரகம் ஏற்படும். இவ் வுலகிலும் துக்கம் ஏற்படும். அறிந்தோ, அறியாமலோ பாபங்களைச் செய்து விட்டால், பிறகு அவன் நான் பாபம் செய்து விட்டேனே துக்கம் ஏற்படுமே என்று பயம் ஏற்பட்டால் அவன் தவறு செய்த தர்க்கு வ்ருத்தி செய்த பாபத்திற்குத் தக்கபடி சாஸ்திரம் கூறிய புண்ய கர்மாவைச் செய்தால் அந்த பாபம் விலகும். துக்கம், நரகம் ஏற்படாது. திரும்பவும் அந்த பாபத் தைச் செய்ய மனம் வராது. ஆனால் பிராயச் சித்தம் செய்து கொள்ளலாம் என்று நினைத்து பாபத்தைச் செய்தால் பாபம் போகாது. அறியாமலோ அல்லது தேச காலங்களை அனுஸரித்து பாபம் செய்ய நிர்பந்தம் ஏற்பட்டாலோ அந்ட பாபம் பிராயச்சித்த கர்மாவால் நீங்கும்.

ஒருவன் நான் இந்த பாபத்தை செய்து விட்டேன் இந்த பாபம் நீங்குவதற்கு சாஸ்திரத்தில் கூறப்பட்ட முறைப்படி இந்த பிராயச்சித்த கர்மாவைச் செய்வேன் இதனால் என் பாபம் நீங்கி நான் பரிசுத்தனாவேன், என்று நிச்சய புத்தியுடன் செய்ய ப்பட்ட கர்மா பிராயச் சித்தம் எனப்படும்.

பாபங்களைச் செய்தால் அதனால் யம லோகத்தில் நரக, துக்கங்களை அனுபவிக்க நேரிடும், என்ற எண்ணமுள்ள ஆஸ்திகன் பாப கர்மாவைச் செய்ய அதிகாரியாவான். இருபத்தி எட்டு கோடி நரகங்களில் இருபத்தி எட்டு நரகங்கள் மிகவும் கஷ்டமானவை. பஞ்சமகா பாதகங்களைச் செய்தவன் நரகங்களில் பாப

பலனை அனுபவித்து விட்டு அதன் மீதியை அனுபவிக்க பசு, பக்ஷி, மிருகம், கூன் குருடு, செவிடு, தீராத நோயளிகளாகவும் பிறப்பான். இன்ன பாபத்தைச் செய்தவன் இன்ன விதமாக பிறப்பான் என்று தர்ம சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் மஹா பாதகங்கள். அதி பாதகங்கள், ஸம பாதகங்கள், உப பாதகங்கள், ஸங்கரீகரணங்கள், மலினீ கரணங்கள் அபாத்ரீ கரணங்கள். ஜாதி பிரம்ச கரணங்கள் பிரகீர்ணங்கள் எனவும் ஒவ்வொன்றும் பல வகையானது என்று சாஸ்திரங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தெரியாமல், அறியாமல் செய்த பாபங்களுக்கு, அதற்குரிய பிராயச்சித்தம் செய்தால் அந்த பாபம் நீங்கும். அறிந்தே செய்தால் பிராயச்சித்தம் இரு மடங்கு செய்ய வேண்டும்.

ஒரு மனிதனயோ ஒரு பாம்பயோ கொன்றவன் சரிதான் என்று அங்கீகரித்தவன், தூண்டியவன், வழி சொன்னவன், உத்ஸாஹப் படுத்தியவன், உதவி செய்தவன், குற்றவாளிக்கு இடம் கொடுத்தவன், அவனுக்கு ஆயுதம் கொடுத்தவன், அன்னம் கொடுத்தவன், தடுக்கச் சக்தி இருந்தும் தடுக்காதவன் இவர்களுக்கும் பாபத்தில் பங்கு உண்டு.

பாபங்கள், பல பேருக்குத் தெரியும்படி பாபம் செய்தல், மற்றவர்களுக்குத் தெரியாமல் ரஹஸ்யமாகப் பாபம் செய்தல் என இரு வகை. பஹிரங்கமாகச் செய்த பாபத்திற்குப் பல பேர் அறியவே பெரியோர்களிடம் கேட்டுத் தகுந்த பிராயச்சித்தம் செய்யலாம். ரஹஸ்ய பாபத்திற்கு ரஹஸ்யமாகவே ப்ராயச்சித்தம் செய்யலாம்.

பாபங்களுக்கு பிராயச்சித்தமாக சாஸ்திரங்களில் பல விதமான கிருச்ரங்களை அனுஷ்டிக்கும் படி கூறியிருக்கிறது. அவைகள் அநேகமாக ஸ்நாந நியமம், உபவாஸ நியமம் இவைகளோடு கூடியவை. அவைகளை கலி யுகத்தில் அல்ப பலமுள்ள மனிதர்களால் அனுஷ்டானம் செய்வது மிகவும் சிரமம். முடியாது. ஆகையால் சுலப முறைகள் கூறப்பட்டுள்ளது. அவைகளில், மஹா பாதகங்களைச் செய்தவன், கால் நடையாக ராமஸேது வழியில் பிக்ஷை வாங்கி புஜித்து திரும்பி வந்து கோதானம், பிராமன போஜங்களைச் செய்வித்தல் இவைகளால் நீங்கும். தினந்தோறும் வேத பாராயணம் செய்தல், பஞ்ச யஞ்ஞங்கள், பொறுமை, தினமும் முறைப்படி 16 பிராணாயாமங்கள் செய்வது பொதுவான பிராயச்சித்தம். ஸகல பாபங்களுக்கும் கலியுகத்தில் ஸுலப பிராயச்சித்தம் கூறப்பட்டுள்ளது. மனதை அடக்கி ஒரு நிமிஷமாவது அச்யுதனை தியானம் செய்தல், ராம நாம ஸங்கீர்த்தனம். ஸாம்ப பரமேஸ்வர நாம ஸங்கீர்த்தனம் ருத்ர மந்திரங்களை பதினொரு தடவை ஜபம் செய்தல், பிராஜபத்ய கிருச்ரத்தை உபவாஸ முறையாகச் செய்ய முடியாதவர்கள் பத்தாயிரம் காயத்ரீ ஜபம் செய்தல் காயத்ரியால் ஆயிரம் தில் ஹோமம் செய்தல். பன்னிரெண்டு பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்தல், ஒரு கோதானம் செய்தல் இவைகளில் ஏதாவது ஒன்றைச் செய்யலாம்.

கெங்கா ஸ்நாநம், புண்ய தீர்த்த யாத்திரை, காயத்ரீ ஜபம், வேத பாராயணம், கோதானம், பகவத் நாம ஸ்மரண கீர்த்தனங்கள், தானங்கள் இவைகள் பொதுவாக எல்லா பாபங்களுக்கும் பிராயச்சித்தமாகும். தரித்ரன் உபவாஸ ஸ்நானங்களாலும்,

தனிகனாக இருந்தால் திரவிய தானங்களாலும், பிராயச்சித்தம் அனுஷ்டிக்க வேண்டும்.

உலகில் சேதனம், அசேதனம் என்ற ஸகலமும் புண்ய, பாபங்களை யனுஸரித்து ஈச்வரனால் நடத்தப்படுகிறது. கலியுகம் பாபம் அதிகமுள்ளதாகத் தானிருக்கும். க்ருத யுகாதிகளில் போல் கலியில் தர்மங்களை அனுஷ்டானம் செய்ய முடியாது. ஆகையால் மனிதன் தன்னால் முடிந்த அளவு சிரத்தையுடன் பகவதர்பணமாக கர்மாக்களைச் செய்தால் பகவான் அனுக்ரஹம் செய்வார். ஆகையால் தர்மங்களை விடக்கூடாது. கலியில் உபவாஸம் இருக்க முடியாவிட் டால் ஜல, கிழங்கு, பழம், பால் உப்புச் சேர்க்காமல் ஹவிஸ் இவைகளைச் சாப்பிட லாம். வியாதியிருந்தால் மருந்து சாப்பிடலாம். உபவாஸ தினத்தில் அடிக்கடி ஜலம் குடிப்பது, அடிக்கடி தாம்பூலம் போடுவது, பகலில் தூங்குவது, ஸ்த்ரீ ஸங்கமம் இவைகள் கூடாது. எப்பொழுதும் புண்ய மந்திரங்களையோ, பகவானுடைய நாமாக்க ளையோ சொல்லிக் கொண்டிருந்தால் துஸப்னம், பேய், பிசாசுகள், ரோகம், திருடர் கள் அணுகமாட்டா.

சிவ, விஷ்ணு ஸந்நிதியில் தீபம் ஏற்றி வைத்தால் அச்வமேத பலன். போஜனத்தின் பிறகு விஷ்ணு நிர்மால்ய துளஸியைச் சாப்பிட்டால் பாபங்கள் நீங்கும். வைதிக காரியங்களை ஆரம்பம் செய்யும் முன் இரண்டு தடவை ஆசமனம் செய்ய வேண்டும். வேதம் படித்தவனிடம் பாபம் ஒட்டாது. வேதாத்யயனம் பிராமண னுக்கு முக்யம். கன்னிகை எவ்வளவு காலம் விவாஹமாகாதவளாக இருந்தாலும் குணமில்லாத வரனுக்கு விவாஹம் செய்து கொடுக்கக் கூடாது. முறைப்படி பிராணாயமம் செய்வதாலும், ஸுரியன் ஸ்வரூபத்தை தியானம் செய்வதாலும் பாபம் விலகும். சிவ பஞ்சாக்ஷரம் சிறந்த மந்திரம். வைதிக மார்கம் சிறந்தது. ஸாம்ப ஸதாசிவனை உபாஸிப்பவர்களுக்கு ஸகலமும் ஸித்திக்கும் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிப்பார். கலியில் சிவ ராம கிருஷ்ணாதி நாமாக்களை ஜபிக்க வும்.

“ஹரே ராம ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண, கிருஷ்ண, கிருஷ்ண ஹரே ஹரே”

“ஸ்ரீ ராம ஜய ராமஜய ஜய ராம”

இந்த மந்திரத்தை போஜனத்தின் பின் 21 தடவை ஜபிப்பது நலம்.

சிவ ராம கோவிந்த நாராயண மஹாதேவ ஸங்கரா, ஹரே கிருஷ்ணா என்று பல தடவை ஜபம் செய்வது நலம், என்று ஒரு பெரியவர் கூறுகிறார்.

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களுக்குள் தர்ம மும், அர்த்தமும் ஸாதனங்கள். காமமும், மோக்ஷமும் பலம் - பலன் - பிரயோஜன புருஷார்த்தங்கள். காமம் என்பது இவ்வுலகிலும், பரலோகங்களிலும் வெளி விஷய

ங்களால் உண்டாகும் சுகம். கர்மோபாஸனங்களால் உண்டாவது தார தம்ய முள்ள வை. துக்கத்திற்குக் காரணம். துக்கம் கலந்தவை நிலையற்றவை ஆகையால் முக்ய புருஷார்த்தமாகாது. மோக்ஷ ஸுகம் ஒன்று தான் ஒரே விதமானது. துக்கம் கலப்பில்லாதது, நித்யமானது. அதையடைய முதலாவதாக சித்த சுத்தி வேண்டும். அதற்கு ஆரம்பத்தில் அவரவர்களுக்கு ஏற்பட்ட வர்ணாசிரமாதி தர்மங்களையும், உபாஸனைகளையும் செய்ய வேண்டும். நித்ய, நைமித்திக கர்மாக்க்ளை அவசியம் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் பாபம் உண்டு பலனைக் கருதிச் செய்யக் கூடாது. பிராயச்சித்த கர்மாக்களையும் செய்ய வேண்டும். இவைகளால் பாபம் நீங்கி சித்த சுத்தி ஏற்படும். இவைகளால் அர்த்த காமங்களும் ஓரளவு ஏற்படும். காம்ய கர்ம உபாஸனங்களை அததர்குரிய காம பலனைக் கருதிச் செய்தால் அந்தந்த பலன்கள் கிடைக்கும். கொஞ்சம் சித்த சுத்தியும் ஏற்படும். பலனைக் கருதாமலும் காம்ய கர்மாக்களையும் ஈச்வரார்ப்பணமாகச் செய்யலாம். செய்தால் சித்தம் சுத்தமாகும். பாபங்களைச் மட்டும் ஒருக்காலும் செய்யக் கூடாது. செய்தால் தாழ்ந்த பிறப்புங் நரகமும் ஏற்படும். புண்ய கர்மாக்களையே செய்து கொண்டு வந்தால் ஈச்வரப்ரஸாதத்தால் சித்தம் சுத்தியாகும். அதற்கு அடையாளம் மனதில் காம, குரோதங்கள் குறையும். பாபத்தில் சித்த விருத்தி வராது.

பிரம்ம ஞானத்தால் மோக்ஷதையடைய முதலாவது சித்த சுத்தி தேவை. இத்துடன் பிரும்மசரியம், அஹிம்ஸை, பிராணிகிளிடம் தயை, நேர்மை, ஸத்யம், பொருள்களில் - உடைமைகளில் அதிகம் பற்றுதலின்மை, வைதிக காரியங்களைச் செய்வதில் உறுதி, படிப்பு, பணம் முதலானவைகளால் கர்வமின்மை, ஈச்வர தியானம், ஞானிகளுடன் ஸஹவாஸம், வேதாந்தத்தில் பற்றுதல், சுகமோ, துக்கமோ வந்த காலத்தில் கலக்கமின்மை, தன்னைப் பிறர் பெருமைப் படுத்த வேண்டும் என்ற எண்ணமின்மை. தனிமையில் தியானம் செய்து பழகுதல், மோக்ஷமடைய வேண்டும் என்ற எண்ணம், இவை முதலான ஆத்ம நற்குணங்களும் வேண்டும். (இங்கு பிரும்மசரியம் என்பது ஸ்த்ரீ விஷயங்களில் தவறாமல் இருப்பது) ப்ரும்ம ஞானத்தையடைய முற்கூறியபடி சித்த சுத்தி என்பது முதலாவது, ஸாதனம் (அடிப்படை)

அடுத்த படியாக அந்தரங்க ஸாதனங்கள். (நெருங்கிய ஸாதனங்கள்) அவை நான்கு: - பூலோகம் முதல் வைகுண்ட லோகம் வரையிலும் உள்ள ஸகல லோகங்களும் அவைகளிலுள்ள சேதனம், அசேதனம் என்ற எல்லாம் - ஸகலமும் முதற் காரணமான பரப்ரம்மத்தினிடமிருந்து உண்டாகி நிலை பெற்று அதிலேயே ஒடுங்குவதாக வேத சாஸ்திரங்கள் கூறுவதால் ஸகலமும் அழியக் கூடியது. மாயையால் தோற்றமுடையது ஆகையால் பொய்யானது. பிரம்மம் ஒன்றே ஸத்யமானது என்ற நித்ய, அநித்ய வஸ்து விவேகம் என்ற ஸாதனம் முதலாவது (1)

இவ்விதம் அழியக்கூடியது பொய்யான தோற்றமே என்ற நிச்சய புத்தியால் அவைகளை அடைய வேண்டும் என்ற விருப்பம் ஏற்படாது. ஒருவன் காமியாக ஒரு ஸ்திரீயை விரும்பி அவளை நெருங்கிய பின் கொடிய நோயுள்ளவள் என்று

அறிந்தால் அவளை விரும்ப மாட்டான். ஸ்வப்ன ராஜ்ய பதவியையும் விரும்ப் மாட்டான். அது போலவேதான். மேலும் கர்ப வாஸத்தாலும், மரணத்தாலும் ஏற்படும் சிரமத்தையும், பல ரோகங்கள் கிழப்பருவம் இவைகளில் ஏற்படும் சிரமம். பாபத்தால் ஏற்படும் யம தண்டனை, புத்ர, பார்யாதிகள் ஸரியாக அமையாவிட்டால் அதனால் ஏற்படும் துக்கம், பரலோகத்திலும் இந்திரன், சந்திராதிகளுக்கு ஏற்படும் பல கஷ்டங்கள் புராணாதிகள் மூலம் அறியப்படுவதால் இவைகளை சிந்திப்பதால் இவைகளில் ஏற்படும் ஸுகம் வேண்டாமென்று வைராக்யம் ஏற்படும். பணம் முதலான பொருட்களை ஸம்பாதிப்பதும் கிடைத்ததை காப்பாற்றுவதும் நாமும் அறியாமல் திருட்டு, அழிவு ஏற்பட்டாலும், வீண் செலவு ஏற்பட்டாலும் துக்கமே.

ஸம்ஸார துக்கத்திற்கு முக்யமான காரணங்கள் பெண் ஆசை, பொன் ஆசை, நாக்கு இவை அடக்காமை. ஆகையால் இவைகளை அடக்கி நன்கு ஆலோசித்து, பிரும்ம லோக, வைகுண்டாதி லோக ஸுகங்களும் என்றும் வேண்டாம் என்ற தீர்மான புத்தி வைராக்யம். இஹ ஸமுத்தர, இவ் வுலக மறு உலக ஒரு போகங்களும் வேண்டாம் என்று விரக்தியடைவது இரண்டாவது ஸாதனம் (2)

இது ஏற்பட்ட பிறகு சமம், தமம், திதிஷா, உபரதி, சிரத்தை, ஸமாதி என்ற ஆறு ஸாதனங்களில் ஸமூஹம் வேண்டியதாக முயற்சி வேண்டும்.

இந்த ஆறு பிரிவுள்ள ஸாதனங்கள் ஒன்றுகொன்று ஸஹாயமாக இருப்பதால் இந்த ஆறையும் ஒரு ஸாதனமாக சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

1. **சமம்** என்பது மன அடக்கம். அதாவது மனம் விஷயங்களால் கலக்கமடை யாமல் லக்ஷ்யத்திலேயே நிலைத்திருப்பது உத்தமம். ஸத்வ குணத்தால் மனம் ஆத்மாவை தியானம் செய்து கொண்டிருப்பது மத்யம். மனதை வெளி விஷயங்க ளில் செல்லாமல் தடுத்து குருவினிடம் கவனமாக வேதாந்த சிரவணம் செய்வது மூன்றாவது. மேலும் காமம், கோபம், கஞ்சத்தனம், கொழுப்பு, (பணம் ரூபம் முதலா னவைகளால் கர்வம் கொண்டு நல்லோர், பெரியோர்களை அவமதித்தல்) தன் சரீரம், வீடு, பணங்களில் விசேஷ பற்றுதல். (அவைகளை நிலையானதென்று நினைத்தல்) மற்றவர்களுடைய பணம், வித்யை முதலானவைகளை கண்டு தானும் அவர்களைப் போல் அல்லது மேலாகவோ ஆக வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை. இவை களை விடாதவரை மனச் சாந்தி கிடையாது.

2. **தமம்** - கண், காது, மூக்கு முதலான வெளி இந்திரியங்களை அதனதன் விஷயங்களை நாடி அவைகள் செல்லாமல் அடக்குவது தமம் எனப்படும். (இந்திரி யங்கள் விஷயங்களில் செல்லும் பொழுது அதையனுஸரித்து மனமும் வெளியே செல்லும். அவ்விதம் கண்ட இடங்களில் செல்லும் இந்திரியங்களை அனுஸரித்துச் செல்லும் மனம் தன் நற்செயல்களைச் செய்ய முடியாது. அதனால் மனிதன் அழிந்து விடுவான் (கெட்டு) ஆகையால் மனம் அடங்க இந்திரிய அடக்கம் தேவை. யோக்ய விஷயங்களில் குற்றம் தோஷத்தை நினைத்தல் உபாயம்.

3. **திதிஷா** - முன் செய்த கர்மத்தால் அவ்வப் பொழுது ஏற்படும் ஜ்வராதி தோஷங்கள், திருடன் ஸர்பம், தேள் முதலானவைகளால் ஏற்படும் துக்கம். மின்னல், இடி, மழை, பூகம்பம் முதலானவைகளால் ஏற்படும் தைவிகமான துக்கங்கள் இவைகள் ஏற்பட்ட காலத்தில் ஐயோ துக்கம் வந்து விட்டதே என்று நோகாமல் பாப பலனை அனுபவிக்கிறோம், பாபம் நீங்குகிறது என்று எண்ணி வருந்தாமல் இருப்பது. இதுதான் பொறுமை என்பது. பிறர் செய்யும் மானபமானங்க ளையும் பொறுப்பது.

4. **உபாதி** - உபாதி என்பது, இந்த லோக பர லோகங்களுக்கு ஸாதனமாகக் கூறப்பட்டுள்ள ஸகல வைதிக கர்மாக்களையும் சாஸ்திரங்களில் கூறியபடி தியாகம் செய்வது என்ற ஸந்யாஸம். மோக்ஷமோ நித்யமான ஆத்ம ஸ்வரூபமான தால் அதையடைய கர்மாக்கள் தேவையில்லை. இந்த விவிதஷா ஸந்யாஸம் என்பது பரம ஹம்ஸாசிரமம். பிராமணனுக்கே உண்டு.

5. **சிரத்தை** - வேதாந்த சாஸ்திரமும் அதை உபதேசிக்கும் குருவின் வாக்யங் களும் உண்மையானது என்ற உறுதியான நம்பிக்கை, தைவம், குரு, வேதம், மந்திரம், தீர்த்தம் பெரியோர்களான மஹான்கள், ஔஷதம் இவைகளில் நம்பிக்கை உள்ளவர்களுக்கே பலனளிக்கும். வேதங்கள் ஈஸ்வர வாக்யம். ஈச்வரனை யறிந்த குருவும் ஈச்வரனே ஆகையால் அவ நம்பிக்கை கூடாது.

6. **ஸமாதானம்** - வேதாந்தார்தமான ஸத்ய வஸ்துவை அறிய, ஸ்வர்க்க, புண்ய லோகத்தையடைய ஒரு வில்லாளி லக்ஷியதில் அம்பு எய்ய மனம் பார்வை மற்ற புலன்களை யடக்கி லக்ஷியத்திலேயே புத்தியை நிறுத்துவது போல் மனதை ஒருமுகப் படுத்தி லக்ஷியமான ஆத்ம வஸ்துவில் நிலைக்கச் செய்வது. இவ்விதம் மூன்றாவது ஸாதனமான சமம் முதலான ஆறு ஸாதனங்கள் முற்றும்.

நாலாவது ஸாதனம் முமுக்ஷுத்வம்: - ப்ரும்ம ஞானத்தை ப்ரும்ம ஞானத்தை ஸம்பாதித்து துக்க ரூபமான இந்த ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை யடைய வேண்டும், என்ற தீவிரமான ஆசை - ஒரு உத்தமியான பதிவிரதை பர்தா மரணத்தால் ஸகல உலக விஷயங்களையும் வெறுத்து, பர்தாவுடன் அக்நி பிரவேசம் செய்வது போல் தடுக்கப் படாத மோக்ஷ ஆசை. தீவிரமான மோக்ஷ ஆசை வந்தவன் ஸகல ஐஸ்வர்யாதிகளையும் தியாகம் செய்து ஸந்யாஸம் செய்து கொண்டு விசாரம் செய்வான். சிலர் ஸாஸ்திராப்யாஸத்தால் ஸம்ஸாரம் துக்கம் என்று அறிந்தும் ஐஸ்வர்யாதிகளை விட முடியாமல் ஊசலாடு பவர்கள் நடுத்தரமானவர்கள். முதலாமவர்கள் ஈசுவரனுடையவும், குருவினுடைய வும், அனுக்ரஹத்தால் இந்த ஜன்மாவிலேயே முக்தியடைவார்கள். மற்றும் சிலர் உலக ஆசையை விட முடியாமல் முக்தியடைய பிரயத்தனமே செய்யாமல் ஏதோ காலத்தில் அதாக வந்தால் வாட்டும் என்றிருப்பவர்கள். இவர்களுக்கு ஒருக் காலும் முக்தி கிட்டாது. ஆகையால் மனுஷ்ய ஜன்மாவை யடைந்தவன் பசுக்களைப் போல் ஆஹாராதி ஸுகங்களிலேயே ஈடுபட்டிராமல் முற்கூறிய - விவேகம், வைராக்யம், சமம், முதலான ஆறு, முமுக்ஷுத்தம் என்ற நான்கு ஸாதனங்களை ஸம்பாதித்து

ப்ரும்ம நிஷ்டரான குருவைத் தேடி, அவரைச் சரணம் அடைந்து வேதாந்த விசாரம், மனனம், நிதிதியாஸனம் செய்து ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்தையடைந்து மோக்ஷமடிய முயற்சிக்க வேண்டும். அவனே மனுஷ்யனாவான்.

முற்கூறிய நான்கு ஸாதனங்களும் பெற்றவன் குரு முகமாக வேதாந்த விசாரம் செய்ய யோக்யனாவான். முன் கூறிய நான்கு ஸாதனங்கள் பெறாதவனும், தானே படித்தறியலாம் என்று எண்ணுபனுக்கும் ஞானம் வராது. சுயேச்சை, விசாரணா, தனுமானஸீ, ஸத்வாபத்தி, அஸம்ஸக்தி, பதார்த்தாபாவநா, துர்யகா என்று ஞான பூமிகள் ஏழு என்று வாஸிஷ்ட புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அவைக ளில் சுயேச்சை என்ற முதல்படி இதுவரை கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது படி: - விசாரணா: - முற் கூறிய நான்கு ஸாதனங்களைய டைந்த ஸந்யாஸ் குருவிற்கு உபகாரமான ஏதாவது சாஸ்திர ஸம்மதமான பொரு ளைக் கையிலேந்திக் கொண்டு ஸத்குருவையடைந்து அவரை ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அஞ்சலி செய்து கொண்டு சரணடைய வேண்டும். ஸத்குரு என்பவர் ஸகல வேத சாஸ்திரங்களையும் அறிந்து தன் ஸ்வரூபமாக அநுபவிப்ப வர். ஸகலத்தையும் ப்ரும்மமகாப் பார்ப்பதால் ஸம யுத்தி யுடையவர். பரம சாந்தர், நான், எனது என்ற எண்ணமில்லாதவர். பொருள்களை விரும்பாதவர். உபதேசத்தால் சிஷ்யனுடைய ஸந்தேஹங்களைப் போக்கி உண்மையான ஞானத்தை உபதேசிக்க வல்லவர். கருணைக்கடல். இவ்வித குரு அநேக ஜன்மாக்களில் ஈச்வரனை ஆராதித்து அதனால் சந்தோஷமடைந்த ஈச்வரனை ஆராதித்து அதனால் சந்தோஷ மடைந்த ஈச்வரனே குரு ரூபமாக வந்து பக்தனுக்கு ஞானோபதேஸம் செய்து ஸம்ஸார துக்க ஸாகரத்திலிருந்து கரையேற்றுபவர். குருவே சிவன். சிவனே குரு பேதமில்லை.

அவ்வித குருவிற்கு பக்தி, சிரத்தை, விநயத்துடன் சுச்ருஷை செய்து அவர் ஸந்தோஷமாக இருக்கும் ஸமயமறிந்து பணிந்து கேட்க வேண்டும். கருணா நிதியான தங்களுடைய தெரிசனம் புண்யத்தால் எனக்குக் கிடைத்தது. தாங்கள் என்னை அஞ்ஞான இருளிலிருந்தும் ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்தும் கரையேற்றி காப்பாற்ற வேண்டும் என்று பிரார்திக்க வேண்டும்.

அவனைப் பார்த்து குரு உனக்கு ஸம்ஸார பயம் வேண்டாம் ஸ்வபனத்தில் ஒருவன் பாம்பைக் கண்டு பயந்து அலறுகிறான். எழுந்த பின் பாம்பே இல்லை. அகாரணமாக பயம் ஏற்பட்டது என்று அறிவது போல் உண்மையில் பரமானந்தமான பிரும்மமாக உள்ள உனக்கு ஜடமான சரீரத்தை ஆத்மாவாக அஞ்ஞானத்தால் பிரமம் ஏற்பட்டு அதனால் ஸம்ஸார துக்கம் ஏற்பட்டது. ஆகையால் விசாரத்தால் ஆத்மாவை அறிந்தால் பிரமம் நீங்கி பிரும்ம பாவத்தை அடையலாம் என்றார். பின் அவரிடம் ஆத்மா எது, அனாத்மா எது (அக்)ஞானம் எப்படி, பந்தம் என்றால் என்ன, மோக்ஷம் எவ்விதம் என்று கேட்க வேண்டும்.

ஆத்மா ஸச்சிதானந்த ரூபம். எங்கும் நிறைந்தது. எக்காலத்திலுமுள்ளது. அந்த ஆத்மாவை தவிர வேறுபடாத அதன் சக்தி மாயை எனப்படும். அது ஸத்வ குண, ரஜோ குண, தமோ குணமுடையது. ஸகல பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் காரணமானது. உலகம் மாயையின் தோற்றமே.

ஆத்மா என்றாலும் பிரும்மம் என்றாலும் ஒன்றே. ஆத்மா ஜகத் காரணமான தால் ஸத்யமானது. அதில் தோற்றமானதால் பிரபஞ்சம் பொய்யானது. மெய் போல் தோன்றுகிறது. மாயையின் குணங்களின் சலத்தால் ஸத்வ குண ப்ரதானமான மாயையில் ஞான ரூபமான ஆத்மா பிரதிபிம்பத்தை அடைந்தபொழுது அந்த மாயாவி சிஷ்ட சைதன்யத்திர்க்கு மாயையை பிரதானமாகக் கொண்டு பிரபஞ்ச உபாதான காரணமாகவும், (மண்போல்) ஞானம் சைதன்யத்தை பிரதானமாகக் கொண்டு நிமித்த காரணமாகவும் (குயவன்) ஆகிறது.

அந்த மாயை தமோ குணத்தை பிரதானமாகக் கொண்டு அதில் பிரதிபிம்பத் தை யடைந்த சைதந்யம் ஜீவன் எனப்படுகிறது. இவ்விதம் மாயையால் ஈச்வரன் என்றும் ஜீவன் என்றும் ஆத்மா இரண்டாக வியவஹாரம்.

தமோ குண பிரதானமான மாயையே அஞ்ஞானம். அதன் பல பாகங்களை அநுஸரித்து ஜீவர்கள் அநேகம். ஈச்வரன் தன் மாயா சக்தியால் ஆகாசம் முதலான பஞ்ச ஸூஷ்ம பூதங்களையும், அவைகளின் கலப்பினால் ஸ்தூல பஞ்ச பூதங்களை யும் பஞ்ச பூதங்களாலேயே ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, ஐந்து பிராணண்கள், மனம், புத்தி இவைகளையும் பூமி முதலான லோகங்களையும் லோகங்களில் ஜீவர்களையும் ஜீவர்களுக்கு போக்யமான விஷயங்களையும் ஸ்ருஷ்டி செய்கிறார். இவ்விதம் பிரும்மத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சம் அநித்யம், ஜடம். ஸிருஷ்டிக்கப்பட்ட ஜகத், மாயை இவைகளை தனதாக அபிமானம் கொண்ட பிரும்மத்திற்கு ஈச்வரன் எனப் பெயர்.

முற்கூறியபடி கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, ஐந்து பிராணண்கள், மனஸ், புத்தி இந்த பதினேழும் சேர்ந்து ஸூஷ்ம சரீரம் அல்லது லிங்க சரீரம் எனப்படும். இந்த ஸமஷ்டி லிங்க சரீரத்தை தனதாக எண்ணும் அந்த ஈசுவரனுக்கே ஹிரண்ய கர்பர் எனப் பெயர். ஸ்தூலமான ஸகல லோகங்களையும், சரீரங்களையும் தனதாக எண்ணும் அவருக்கே விராட் புருஷன் எனப் பெயர்.

ஸமஷ்டி என்பது மரக் கூட்டங்களுக்குத் தோட்டம் என்னும், வீடுகளின் ஸமூஹத்திற்கு கிராமம் என்பது போலும், வியஷ்டி என்பது தனியாக, மரம், வீடு என்பது போலும்.

இவ்விதமே மாயையின் ஏகதேசமான அக்ஞானம் (அல்லது அஞ்கனகலிய மான மனம்) பலவானது, தனிதனியாத் "நான் அக்ஞன்" என்று எண்ணமுள்ளவர்கள் ஜீவர்கள். இவர்கள் "பிராஞ்ஞன்" என விவஹரிக்கப் படுகிறார்கள். தனித் தனியான லிங்க சரீரத்தில் அபிமானமுள்ள அவர்கள் தைஜஸன் என வியவஹரிக்கப்படுகி

றார்கள். தனித்தனியான ஸ்தூலமான நம்மால் பார்க்கப்படும் சரீரங்களை தானாகப் பாவிக்கும் பொழுது விச்வன்(கள்) எனப் பெயர். இவ்விதம் முற்கூறிய ஜீவேச்வரப் பிரபஞ்சம் முழுவதும் ஸூத்தமான ஸச்சிதானந்த பர பிரும்மத்தில் அஞ்ஞானத்தால் தோன்றுபவை, ஆகையால் பொய்யானது. ப்ரும்மம் ஒன்றே ஸத்யமானது. ப்ரும்மம் ஒன்றே உள்ளது. ஜீவன் வேறில்லை. "நானே ப்ரும்மம்" என்ற அறிவுதான் உண்மை யான ஞானம். இதனாலேயே இனிப் பிறப்பில்லாத ஆனந்தமயமான முக்தி நிலை. இவ்விஷயம் "தத்வமஸி" முதலான உபநிஷத் மஹா வாக்யங்களால் நன்கு போதிக்கப் படுகிறது. முன் கூறப்பட்ட ஞான பூமிகளில் முதலாவதான "சுபேச்சை" என்ற முதலாவது நிலையை யடைந்தவன் ஸத்குருவையடைந்து வேதாந்த விசாரம் செய்ய வேண்டும். ஸாதகனுக்கு ஓரளவுக்கு முற்கூறிய சாஸ்திரக் ஞானம் இருந்த போதிலும் அந்த ஞானம் நன்கு உறுதியடைய பலவாக அவசியம் செய்ய வேண்டும்.

உபநிஷத்துக்கள் பலவாக இருப்பதால் ஸம்சயம் ஏற்படும். உபக்ரமம் - ஆரம்பம், உபஸம்ஹாரம் - முடிவு முதலான நியாயங்களால் விமர்சம் செய்து தீர்மானிக்க வேண்டும். இந்த விமர்சத்தால் வேதாந்த வாக்யங்களில் முரண்பாடு எண்ணம் நீங்கி நிச்சயம் வரும்.

வேதாந்தம் கூறினாலும் ஸம்ஸாரி துக்கியான நாம் எப்படி ஆனந்த ரூபமான பிரும்மமாக ஆக முடியும் என ஸந்தேஹம் ஏற்படலாம். அவ்வித ஸந்தேகம் நீங்க வேண்டி வேதாங்களில் கூறிய யுக்திகளை (அனுமானம்) மனனம் (சிந்தை) செய்தால் நீங்கும்.

இவ்வித ஸம்ஸயங்கள் நீங்கி தெளிவான ஞானம் ஏற்படுவதற்கு "பிரஸ்தான த்ரயம்" என்ற உபநிஷத்துக்க்ள் பகவத் கீதை, வியாஸர் இயற்றிய பிரும்ம ஸூத்ரங்கள் என்ற மூன்றையும் குருவின் மூலம் அப்யாஸம் செய்ய வேண்டும்.

ஜீவ பிரும்ம ஐக்கிய நிச்சய ஞானம் ஏற்பட்டாலும் வாஸனையால் மனது உலக விஷயங்களை நாடிச் செல்லும். அவ்விதம் செல்லாதபடி தடுக்க "நித்தியாஸனம்" என்ற இடைவிடாத தியானம் "அஹம் பிரும்மாஸ்மி" என்று செய்ய வேண்டும். இதே ஸமாதி எனப்படும். இந்த ஸமாதி நிறை வேறினால் "நானே பிரும்ம" என்ற பிரத்யக்ஷ அனுபவம் ஏற்படும்.

இவ்விதம் குரு முகமான வேதாந்த விசாரத்திற்கு ஞான பூமியில் விசாரணா என்றும் மனனம், தியானம் இவைகளுக்கு "தநுமானஸா" என்றும், "நான் பிரும்மம்" என்ற அநுபவத்திற்கு "ஸத்வாபத்தி" என்றும், 1. சுபேச்சை, 2. விசாரணா, 3. தநுமானஸா "ஸத்வாபத்தி" எனவும் கிரமமாக அறியவும்.

ஸமாதி என்பது நிர்விகல்பம் ஸவிகல்பம் என இரு வகை. ஸவிகல்பம் என்பது தியானம் செய்பவன், தியான விஷயம், தியானம் என பேதங்கள் தோன்றும்.

நிர்விகல்ப ஸமாதி என்பதில் இவ்வித மூன்று வித பேதம் நீங்கி தன் மயமா கவே இருப்பது.

நாலாவது நிலையிலுள்ளவனுக்கு வெளி உலகம் ஸ்வப்னத்தில் போல் லேசாகத் தோன்றும். ஐந்தாவது நிலையிலிருப்பவன் குறிப்பிட்ட சில காலம் ஸமா தியில் இருப்பான். ஆறாவது நிலையில் பிறர் ஸமாதியைக் கலைக்க முயற்சித்தால் ஸமாதி கலைந்து பிறகு திரும்பவும் ஸமாதியில் இருப்பான். ஏழாவது நிலையில் உள்ளவன் ஸமுத்ரம் போல் எப்பொழுதும் உலகத்தை மறந்து ஆத்ம ஸமாதி யிலேயே நிலையாக இருப்பான்.

ஐந்தாவது ஞான பூமி அஸம்ஸ்திகா, ஆறாவது பதார்த்தா பாவனா, ஏழாவது துர்யகா, என சாஸ்திரங்களில் வியவஹாரம்.

இரண்டாவது மூன்றாவது நிலைகளில் அப்யாஸம் செய்பவர்கள் மரணம்டை ந்தால் மறுபிறப்பு உண்டு. நாலாவது முதல் ஏழாவது படி வரை சென்றவர்களுக்கு மரணமே தவிர மறுபிறப்பு கிடையாது. சரீரம் உள்ளவரை ஜீவன் முக்தர்கள் என்றும் பிறகு விதேஹ முக்தர்கள் என்றும் சொல்லப் படுகிறார்கள். இங்கு கூறப்பட்ட விஷயங்கள் பகவத் பாதாளாரின் கிரந்தங்களிலும், வேறு உபநிஷத், கீதை, புராணங்களிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. இது எனக்குத் தெரிந்ததை மனச் சாந்திக்காக எழுதினேன். தவிரவும்.

மஹாதேவ ந விதுஷா புருஷார்த்த விமர்சனம் ।
ஸ்ரீநிவாஸாக்ய சித்யார்த்தம் யதாமத்யநு வர்ணிதம் ॥

॥ அநேந ப்ரீயதாம் ஸாக்ஷாது பகவத்பாத சங்கரம் ॥

॥ சுபம்பூயாத் ॥

॥ குருப்யோ நம: ॥